A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 46 / 2024**

திருமதி M.மாதவி,
M/s. ஆர்த்தி ஏஜென்சீஸ்,
கடத்தூர் அக்ரஹாரம், பெரிய சீரகாபாடி,
சேலம் – 636 308.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு P. மாரப்பன்)

எதிர்

1. மேற்பார்வை பொறியாளர்,
**சேலம்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி அஞ்சல், சேலம்**– 636 014.**

2. செயற்பொறியாளர்/ இ&ப/தெற்கு–சேலம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வள்ளுவர் நகர், அன்னதானப்பட்டி, சேலம் – 636 002.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி D. புஷ்பலதா, மேற்பார்வை பொறியாளர் (i/c)
திரு A. அன்பரசன், செயற்பொறியாளர்/ இ&ப/தெற்கு–சேலம்)

**மனு பெறப்பட்ட நாள்: 25–06–2024**

**கேட்புரை நாள் : 13–08–2024**

**ஆணை நாள்: 27–08–2024**

25.06.2024 அன்று பெறப்பட்ட திருமதி M.மாதவி, M/s. ஆர்த்தி ஏஜென்சீஸ், கடத்தூர் அக்ரஹாரம், பெரிய சீரகாபாடி, சேலம் – 636 308 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 46/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 13.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்

ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

தனது மின் இணைப்பு எண்.481–004–415–இல் உள்ள மின்னழுத்த குறைபாட்டை சரி செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 தனது மின் இணைப்பு எண்.481–004–415–இல் உள்ள மின்னழுத்த குறைபாட்டை சரி செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 புதிய மின்மாற்றி நிறுவப்பட்டு மின்னழுத்த குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் சேலம் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 08.01.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சேலம் மின் பகிர்மான வட்டம் 28.03.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 சேலம் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.03.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*"மின் இணைப்புதாரரின் மின் அழுத்த குறைபாட்டை போக்க 270 மீ தொலைவில் உள்ள மின்மாற்றியில் இணைக்கப்பட்டுள்ள மற்ற மின் இணைப்புகள் மற்றும் மின் பளுவை ஆராய்ந்து மின்மாற்றியில் இணைத்துள்ள அனைத்து மின்*

*இணைப்புகளுக்கும் சீரான மின் விநியோகம் வழங்கும் வகையில், மின் இணைப்பு உரிமையாளரிடம் DCW முறையில் விண்ணப்பம் பெற்று மின் இணைப்பு வளாகத்திற்கு அருகில் மின்மாற்றியினை மாற்றி அமைக்கவும் அல்லது தற்போதுள்ள மின்மாற்றியின் மின் திறனை அதிகரித்து, மனுதாரரின் மின் இணைப்பு உட்பட அனைத்து மின் இணைப்புகளுக்கும் சீரான மின் அழுத்தம் வழங்க செயற்பொறியாளர்/ இப/ தெற்கு அவர்களுக்கு இம்மன்றம் உத்தரவிடுகின்றது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 13.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு P. மாரப்பன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி D. புஷ்பலதா, மேற்பார்வை பொறியாளர் (i/c) மற்றும் திரு A. அன்பரசன், செயற்பொறியாளர்/ இ&ப/தெற்கு–சேலம், சேலம் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 ஆர்த்தி ஏஜென்சீஸ் என்ற பெயரில் கடத்தூர் அக்ரஹாரம், பெரிய சீரகாபாடி சேலம் என்ற இடத்தில் இந்தியன் ஆயில் நிறுவன பெட்ரோல் பங்கு நடத்தி வருவதாகவும்,

இந்த பெட்ரோல் பங்கிற்கு CNG கேஸ் பம்பு இயக்குவதற்கு கூடுதல் மின்சுமை பெற சேலம் வட்டம், வேம்படிதாளம் மின் உதவி பொறியாளரிடம் 04.07.2023ஆம் தேதி விண்ணபப்பித்து 10.07.2023இல் கூடுதல் மின்சுமை கொடுத்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 பின்னர் 11.07.2023இல் தங்களது பெட்ரோல் பம்பில் உள்ள CNG கேஸ் பம்பை இயக்க முயற்சித்த பொழுது மின்அழுத்த அளவீடு குறைவாக வந்த காரணத்தால் பம்பை இயக்க முடியவில்லை எனவும், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மின் பொறியாளர் மின் அளவீட்டை சோதித்து, அளவீடு மிககுறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இதுபற்றி வேம்படிதாளம் உதவி பொறியாளருக்கு போன் மூலமும், நேரிலும் புகார் செய்ததாகவும், ஆனால் அவர்கள் எந்தவித முயற்ச்சியும் செய்து சரி செய்யவில்லை பின்னர் உதவி செயற்பொறியாளர் அவர்களிடமும் பலமுறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை பின்னர் ஆன் லைனில் முதல் புகார் 08.01.2024ம் தேதி மனு எண்.801241430633 ஆக கொடுத்ததாகவும், இந்த புகாருக்கும் உதவி பொறியாளர் எந்தவித முயற்ச்சியும் எடுக்கவில்லை எனவும், பின்னர் மீண்டும் இரண்டாவது முறையாக 07.02.2024ம் தேதி ஆன்லைனில் புகார் கொடுத்ததாகவும், அதற்கும் சரி செய்யவில்லை எனவும், பின்னர் மூன்றாவது முறையாக 16.02.2024ஆம் தேதி புகார் கொடுத்ததாகவும், இதன் பின்னர் உதவி பொறியாளர் 14.03.2024ஆம் தேதி கடிதம் அனுப்பியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அந்த கடிதத்தில் மின் கம்பத்தில் 6 நெம்பர் மின் கடத்தியிலிருந்து 2 நெம்பர் மின் கடத்தியாக மாற்றம் செய்யப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டதாக தெரிவித்திருந்ததாகவும், மேலும் மின் அழுத்த அளவீடு சரி செய்யப்பட்டதாக பொய்யாக தெரிவித்திருந்ததாகவும், பின்னர் நான்காவது முறையாக ஆன்லைனில் 19.03.2024இல் புகார் மனு கொடுத்து பின்னர் 21.03.2024ஆம் தேதி மேற்பார்வைபொறியாளர் அலுவலகத்திலிருந்து 28.03.2024ஆம் தேதி மின்நுகர்வோர் அலுவலகத்திற்கு வரும்படி தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தாங்கள் 28.03.2024ஆம் தேதி மின்நுகர்வோர் குறைதீர்க்கும் அலுவலகத்திற்கு ஆவணங்களுடன் சென்று முறையிட்ட பொழுது ஒரு மாதத்தில் சரி செய்வதாக

கூறியதாகவும், பின்னர் 24.04.2024ஆம் தேதி உதவி பொறியாளர், வேம்படிதாளம் வேறு மின்மாற்றி அமைக்கப்பட்டு மின் அழுத்தம் சரி செய்துவிட்டதாக கடிதம் கொடுத்ததாகவும், ஆனால் இன்றுவரை சரி செய்யாமல் தனது கேஸ் பம்பு இயங்கவில்லை எனவும், பின்னர் 05.05.2024ஆம் தேதி குறைதீர்க்கும் மனு எண்.3/2024இல் அனுப்பிய கடிதத்தில் மின்மாற்றி தனது பெட்ரோல் பங்கில் இருந்து 270 மீட்டர் தூரத்தில் இருப்பதால் மின் அழுத்த அளவீடு குறையும் என்றும், DCW முறையில் விண்ணப்பம் பெற்று தனது வளாகத்தின் அருகில் அமைக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அல்லது மின்மாற்றியின் திறனை அதிகரித்து மின் அளவீட்டை சரி செய்வதாக கூறப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 270 மீட்டர் தூரத்தில் மின் மாற்றியிருந்தால் மின் அளவீடு குறையும் என்பது சரியானதாக தெரியவில்லை எனவும், மேலும் DCW இல் விண்ணப்பம் கொடுக்க வேண்டும் என்பதை தான் மின்சுமை அதிகம் பெற விண்ணப்பித்த பொழுது கூறவில்லை எனவும், மேலும் புதிய மின்மாற்றியினை ஏன் மாற்றவில்லை எனவும், இதனால் தனக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவும், மின்நுகர்வோர் பணம் கட்டித்தான் மின்சாரத்தை பெறுகின்றதாகவும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் சிறிதளவும் நுகர்வோர்களைப் பற்றி சிந்திக்கவில்லை எனவும், மின்நுகர்வோர் இந்தியன் ஆயில் நிறுவனம் ஆகும் எனவும், இதனால் பொதுமக்கள் எத்தனை பேர் பயன் அடைந்திருப்பார்கள் என்று சிறிதளவும் மின்வாரியம் கண்டுகொள்ளவில்லை எனவும், 28.03.2024ஆம் தேதி குறைதீர்க்கும் மன்றத்தில் தாங்கள் ஆஜர் ஆன பொழுது பலமணி நேரம் காக்க வைத்ததாகவும், நுகர்வோர் மின்வாரியத்திற்கு இல்லை என்றால் மின்வாரியம் என்னவாகும் என்பதை புரிந்து கொள்ளவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 ஆகவே, 10.07.2023 முதல் இன்றுவரை பெட்ரோல் பம்பு சரியாக இயக்க முடியவில்லை எனவும், இதற்கு மின்வாரியம்தான் பொறுப்பு, கடந்த ஒன்பது மாதங்களாக இயங்காமல் மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவும், ஆகவே மின்வாரியம் கடந்த ஒன்பது மாதத்திற்கு ஒன்பது லட்சம் நஷ்டஈடு வழங்கவேண்டும்

எனவும், மேலும் உடனடியாக மின்அழுத்த அளவீட்டை சரிசெய்து தர உத்தரவு வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 சேலம் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் 28.3.2024 ஆம் தேதி கூட்டம் நடைபெற்று தனது புகார் மனுவின் மீது விசாரணை செய்து அனுப்பிவிட்டதாகவும், எந்தவித உத்தரவு ஆணையும் தனக்கு அன்று வழங்கப்படவில்லை எனவும், கடந்த மாதம் 5.5.2024ஆம் தேதி பதிவு தபால் மூலம் 28.3.2024ஆம் தேதி நடந்த விசாரணையின் ஆணையை அனுப்பியுள்ளதாகவும், தான் மேல்முறையீட்டு மனுவை 23.05.2024ம் தேதி மின்குறைதீர்ப்பாளருக்கு அனுப்பியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 சேலம் மின்பகிர்மான குறை தீர்க்கும் மன்றத்தின் தீர்வு ஆணையை காலதாமதமாக ஏன் வழங்கப்பட்டது என்பதை தாங்கள் விசாரணை' செய்யும்படி கேட்டுக்கொள்வதாகவும், இந்த மேல் முறையீட்டு மனுவை 22 நாளில் அனுப்பியதில் தன்மீது எந்தவித தவறும் இல்லை என தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 வேம்படிதாளம் பிரிவில் மேனேஜர் இந்தியன் ஆயில் கார்பரேசன் பெயரில் வீதப்படி VI, 5 KW, SC. No 481–004–415, நாள்.11.11.2014 அன்று மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும், அதன் பின்பு பணிகள் முடிக்கப்பட்டு 06.07.2015 அன்று வீதப்படி V ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் பின்பு கூடுதல் பளு வேண்டி விண்ணப்பத்தின் அடிப்படையில் 15 KW அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், மொத்தம் 20 KW எனவும், மேலும் 04.07.2023 அன்று 29 KW கூடுதல் மின் பளு வேண்டி விண்ணப்பத்தின் அடிப்படையில் 10.07.2023 அன்று 29KW கூடுதல் மின் பளு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆக மொத்தம் 49 KW எனவும், 49 KW பெற்றும் மின் இணைப்பு பெறப்பட்ட நாளிலிருந்து இது நாள் வரை மின் அழுத்தம் குறைவாக வருகிறதாக எந்த வித புகார் மனுவும் அளிக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் 08.01.2024 அன்று குறைந்த மின் அழுத்தம் காரணமாக தங்களது பெட்ரோல் பங்க்கில் கேஸ் பம்ப் மோட்டார் இயங்கவில்லை என மின்நுகர்வோர்

குறைதீர்க்கும் மன்றத்தில் (CGRF)ல் ஆர்த்தி ஏஜென்சி கடத்தூர் அக்ரஹாரம் என்ற பெயரில் புகார் மனு பெறப்பட்டதால் மேற்கண்ட இணைப்பு எண்.481–004–415ல் உள்ள மின் அழுத்தம் அளவீடு செய்யப்பட்டதாகவும், 18.01.2024 அன்று மின் அளவீடு R–N–226,Y–N–223.B–N–242 ஆகவே மேற்கண்ட மின் அழுத்தத்தில் மின்மாற்றியில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து மின் இணைப்புகளில் மோட்டார் நன்றாக இயங்கி வருகிறதாகவும், மேலும் மற்ற மின்நுகர்வோரிடமிருந்து குறைந்த மின் அழுத்தம் உள்ளது என புகார் ஏதும் இல்லை எனவும், 481– 004–415 மின் இணைப்பை கள ஆய்வு செய்த போது உரிமையாளர் பெட்ரோல் பங்க்கில் பொருத்தப்பட்டுள்ள 23KW கேஸ் பம்ப் மோட்டாரை இயக்கும் போது மின் அழுத்தம் குறைந்ததால் மின் மோட்டார் இயங்கவில்லை என்பது தெரியவந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 பின் மீண்டும் 22.01.2024 அன்று Peak hoursல் ஒருமுறை மின் அளவீடு செய்யப்பட்டதாகவும், மின் அளவீடு R–N–218, Y–N–219 B–N–225 என மின் அளவீடு காண்பித்தது. ஆகவே Peak hours ல் ஏற்பட்ட மின் அழுத்த குறைபாட்டை சரி செய்ய மேம்பாடு திட்டத்தில் புதிய மின் மாற்றி அமைக்க புகார் மனுதாரர் ஆர்த்தி ஏஜென்ஸி அவர்களை தொடர்பு கொண்டு கூடுதல் மின் அழுத்தம் கிடைக்க புதிய மின் மாற்றி பெட்ரோல் பங்க் வளாகம் அருகே அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டதாகவும், புகார் மனுதாரர் அதனை ஏற்காமல் சுமார் 270 மீட்டர் தொலைவில் உள்ள தேசிய நெடுஞ்சாலை அருகே மின் மாற்றி அமைத்து கொடுக்க கோரியதாகவும், மின் அழுத்தக் குறைவை சரி செய்ய மனுதாரர் அலுவலரால் குறிப்பிட்ட இடத்தை ஏற்காமல் இருந்த காரணத்தால் உதவி செயற்பொறியாளர் / இ&ப/ வேம்படிதாளம் அவர்களுடன் மீண்டும் களஆய்வு செய்யப்பட்டு பெட்ரோல் பங்க் அருகே மின் மாற்றி அமைக்க இடம் கோரிய பொழுது மனுதாரர் தான் குறிப்பிட்ட இடத்தில் மின் மாற்றி அமைத்து மின்சாரம் வழங்குமாறும் அவ்வாறாக கிடைக்க பெறும் மின் அழுத்தமே போதுமானது எனவும் உறுதிப்பட தெரிவித்ததுடன் இது சம்பந்தமாக மீண்டும் பேச விருப்பமில்லை எனவும் தெரிவித்துவிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மின் நுகர்வோர் குறிப்பிட்டவாறு 270 மீட்டர் தொலைவில் உள்ள தேசிய நெடுஞ்சாலை அருகே மின் மாற்றி அமைக்கப்பட்டு 02.02.2024 அன்று மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், 02.02.2024 அன்று மின் அழுத்த அளவீடு R–223,Y– 223 B–233

அதனை தொடர்ந்து மனுதாரர் புகார் மனு வழங்கிடவே மின் பாதையில் உள்ள மின் கடத்தி 7/2.59mm யிலிருந்து 7/3.35mm ஆக புதிய மின் கடத்தி 22.02.2024 அன்று மாற்றப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 22.03.2024 அன்று மின் அழுத்த அளவீடு R-227 Y-227, B-235 எனவும், ஆகவே புகார் மனுதாரருக்கு உரிய மின் அழுத்தத்துடன் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 28.03.2024 அன்று மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் மின் அழுத்த குறைபாடு சரி செய்ய பெறப்பட்ட வழி காட்டுதல் படி 02.04.2024 அன்று முக்கோணம்பாளையம் SS-15 ல் நிறுவப்பட்ட 63 KVA மின் மாற்றியை 100KVA மின்மாற்றியாக அமைத்து கூடுதலாக மின்னழுத்தம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு மின் அழுத்தம் அளவீடு செய்யப்பட்டதாகவும் உதவி பொறியாளர்/இ&ப/வேம்படிதாளம் அவர்களால் மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 தற்போது Tamil Nadu Electricity Ombudsman ன் மூலமாக பெறப்பட்ட புகார் மனு சம்பந்தமாக 15.07.2024 அன்று காலை 10.00 மணியளவில் மின் அழுத்த மின் அளவீடு செய்யப்பட்டதாகவும், மின் அழுத்தம் R-246, Y- 241, B-249 உள்ளதாகவும், மேலும் மாண்புமிகு தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் அறிவித்துள்ள படி (TNERC/SPR/9-1-4 dated 25.07.2006) மின் அழுத்தம் சரியாக உள்ளதாகவும், மின் இணைப்பு எண்: 481-004-415 உரிமையாளர் The Manager, Indian Oil Corporation, Kollukaradu Medu Katathoor Agarakaram அவர்களை தொடர்பு கொண்ட போது மின்னஞ்சல் மூலமாக "We Would hereby like to confirm that the complaint was attended immediately and issue has been rectified. Till now, we have not faced the issue again" என்று நேரம்: 11.58am நாள் 16.07.2024 அன்று தெரிவித்து உரிமையாளர் அனுப்பியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் ஆர்த்தி ஏஜென்சீஸ் என்ற பெயரில் கடத்தூர் அக்ரஹாரம், பெரிய சீரகாபாடி சேலம் என்ற இடத்தில் இந்தியன் ஆயில் நிறுவன பெட்ரோல் பங்க் நடத்தி வருவதாகவும், இந்த பெட்ரோல் பங்கிற்கு CNG கேஸ் பம்பு இயக்குவதற்கு கூடுதல் மின்சுமை பெற விண்ணப்பித்து 10.07.2023–இல் கூடுதல் மின்சுமை பெற்றதாகவும், தங்களது பெட்ரோல் பம்பில் உள்ள CNG கேஸ் பம்பை இயக்க முயற்சித்த பொழுது மின்அழுத்த அளவீடு குறைவாக வந்த காரணத்தால் பம்பை இயக்க முடியவில்லை எனவும், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மின் பொறியாளர் மின் அளவீட்டை சோதித்து, அளவீடு மிககுறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 இதுபற்றி உதவி பொறியாளருக்கும் உதவி செயற்பொறியாளருக்கும் பலமுறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், பின்னர் பலமுறை இணையதளத்தில் புகார் கொடுத்ததாகவும், அதற்கு உதவி பொறியாளர் அளித்த பதில் கடிதத்தில் மின் கம்பத்தில் 6 நெம்பர் மின் கடத்தியிலிருந்து 2 நெம்பர் மின் கடத்தியாக மாற்றம் செய்யப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டதாக தெரிவித்திருந்ததாகவும், மேலும் மின் அழுத்த அளவீடு சரி செய்யப்பட்டதாக தெரிவித்திருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் அலுவலகத்திற்கு ஆவணங்களுடன் சென்று முறையிட்ட போது ஒரு மாதத்தில் சரி செய்வதாக கூறியதாகவும், பின்னர் உதவி பொறியாளர் வேறு மின்மாற்றி அமைக்கப்பட்டு மின் அழுத்தம் சரி செய்துவிட்டதாக கடிதம் கொடுத்ததாகவும், ஆனால் இன்றுவரை சரி செய்யாமல் தனது கேஸ் பம்பு இயங்கவில்லை எனவும், பின்னர் குறைதீர் மன்றம் அனுப்பிய கடிதத்தில் மின்மாற்றி தனது பெட்ரோல் பங்க்கில் இருந்து 270 மீட்டர் தூரத்தில் இருப்பதால் மின் அழுத்த அளவீடு குறையும் என்றும், DCW முறையில் விண்ணப்பம் பெற்று தனது வளாகத்தின் அருகில் அமைக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அல்லது மின்மாற்றியின் திறனை அதிகரித்து மின் அளவீட்டை சரி செய்வதாக கூறப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 ஆகவே, கூடுதல் மின்சுமை பெற்ற நாள் முதல் இன்றுவரை பெட்ரோல் பம்பு சரியாக இயக்க முடியவில்லை எனவும், இதற்கு மின்வாரியம்தான் பொறுப்பு, கடந்த ஒன்பது மாதங்களாக இயங்காமல் மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவும், ஆகவே மின்வாரியம் கடந்த ஒன்பது மாதத்திற்கு ஒன்பது லட்சம் நஷ்டஈடு வழங்கவேண்டும் எனவும், மேலும் உடனடியாக மின்அழுத்த அளவீட்டை சரிசெய்து தர உத்தரவு வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் வேம்படிதாளம் பிரிவில் மேனேஜர், இந்தியன் ஆயில் கார்பரேசன் பெயரில் வீதப்படி VI, 5 KW, SC. No 481-004-415, நாள்.11.11.2014 அன்று மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும், அதன் பின்பு பணிகள் முடிக்கப்பட்டு 06.07.2015 அன்று வீதப்படி V ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் பின்பு மூன்று முறை கூடுதல் மின்பளு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆக மொத்தம் 49 KW எனவும், 49 KW பெற்றும் மின் இணைப்பு பெறப்பட்ட நாளிலிருந்து இது நாள் வரை மின் அழுத்தம் குறைவாக வருவதாக எந்தவித புகார் மனுவும் பெறப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மேல்முறையீட்டாளரின் பெட்ரோல் பங்கில் கேஸ் பம்ப் மோட்டார் இயங்கவில்லை என மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் ஆர்த்தி ஏஜென்சி என்ற பெயரில் புகார் மனு பெறப்பட்டதால் மேற்கண்ட இணைப்பு எண்.481-004-415ல் உள்ள மின் அழுத்தம் அளவீடு செய்யப்பட்டதாகவும், மின் அளவீடு R-N-226, Y-N-223, B-N-242 இருந்ததாகவும், ஆகவே மேற்கண்ட மின் அழுத்தத்தில் மின்மாற்றியில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து மின் இணைப்புகளில் மோட்டார் நன்றாக இயங்கி வருகிறதாகவும், மேலும் மற்ற மின்நுகர்வோரிடமிருந்து குறைந்த மின் அழுத்தம் உள்ளது என புகார் ஏதும் இல்லை எனவும், 481-004-415 மின் இணைப்பை கள ஆய்வு செய்த போது உரிமையாளர் பெட்ரோல் பங்கில் பொருத்தப்பட்டுள்ள 23KW கேஸ் பம்ப் மோட்டாரை இயக்கும் போது மின் அழுத்தம் குறைந்ததால் மின் மோட்டார் இயங்கவில்லை என்பது தெரியவந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 பின்னர் மீண்டும் Peak hoursல் ஒருமுறை மின் அளவீடு செய்யப்பட்ட போது மின் அளவீடு R-N-218, Y-N-219 B-N-225 என காண்பித்ததாகவும், ஆகவே Peak hours ல் ஏற்பட்ட மின் அழுத்த குறைபாட்டை சரி செய்ய மேம்பாடு திட்டத்தில் புதிய மின் மாற்றி அமைக்க மின் நுகர்வோர் குறிப்பிட்டவாறு 270 மீட்டர் தொலைவில் உள்ள தேசிய நெடுஞ்சாலை அருகே மின் மாற்றி அமைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், அப்போது மின்னழுத்த அளவீடு R-223, Y- 223, B-233 இருந்ததாகவும், அதனை தொடர்ந்து மனுதாரர் புகார் மனு வழங்கிடவே மின் பாதையில் உள்ள மின் கடத்தி 7/2.59mm யிலிருந்து 7/3.35mm ஆக புதிய மின் கடத்தி மாற்றப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 ஆகவே புகார் மனுதாரருக்கு உரிய மின்னழுத்தத்துடன் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் குறைதீர்க்கும் மன்றத்தில் மின் அழுத்த குறைபாடு சரி செய்ய பெறப்பட்ட வழி காட்டுதலின்படி முக்கோணம்பாளையம் SS-15 ல் நிறுவப்பட்ட 63 KVA மின் மாற்றியை 100KVA மின்மாற்றியாக அமைத்து கூடுதலாக மின்னழுத்தம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்னழுத்த அளவீடு செய்யப்பட்டதாகவும், மேலும் மின் இணைப்பு எண் 481-004-415-இன் உரிமையாளர் The Manager, Indian Oil Corporation, Kollukaradu Medu Katathoor Agarakaram அவர்களை தொடர்பு கொண்ட போது மின்னஞ்சல் மூலமாக "We Would hereby like to confirm that the complaint was attended immediately and issue has been rectified. Till now, we have not faced the issue again" என்று நேரம்: 11.58am நாள் :16.07.2024 அன்று தெரிவித்து உரிமையாளர் அனுப்பியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.10 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 14 –ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"14. Permissible Limites for Voltage and Frequency variations*
> *xxx*
> *xxx*
> *Provided that when the grid supply voltage is maintained at its permissible limits the Distribution Licensee shall ensure that voltage variation (for a minimum durations of at least seven continuous days) at the point of commencement of supply to consumer shall not vary from the declared voltage as below:-*

| *Type of supply and declared voltage* | *Variation maximum limit %* | *Variation minimum limit %* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| *240 Volts single phase 50 Hz AC supply* | *6% of declared voltage* | *10% of declared voltage* |
| *415 Volts three phase 50 Hz AC supply* | *6% of declared voltage* | *10% of declared voltage* |
| *11000/22000 Volts three phase 50 Hz AC supply* | *6% of declared voltage* | *10% of declared voltage* |

*"*

7.11 இதன் மூலம் அனுமதிக்கப்பட்ட குறைந்த மின்னழுத்தம் 216V எனவும், உட்சபட்ச மின்னழுத்தம் 254V எனவும் தெரியவருகிறது. மேலும், எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் புகார் செய்த காலத்தின் அடிப்படையில் 18.01.2024 மற்றும் 22.01.2024 ஆய்வு செய்து குறிக்கப்பட்ட மின்னழுத்த அளவீடுகள் பின்வருவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| Sl.no. | Date of measurement | Voltage measured |
|---|---|---|
| 1. | 18.01.2024 | RN-226V |
| | | YN-223V |
| | | BN-242V |
| 2. | 22.01.2024 | RN-218V |
| | | YN-219V |
| | | BN-225V |

மேலும் 02.02.2024 அன்று புதிய 63 KVA மின்மாற்றி அமைக்கப்பட்டு மின்னூட்டம் வழங்கப்பட்டுள்ளது. 22.02.2024 அன்று மேல்முறையீட்டாளருக்கு மின்னூட்டம் வழங்கும் மின் பாதையில் உள்ள மின்கடத்தி 7/2.59 mm–லிருந்து 7/3.35mm ஆக மாற்றப்பட்டுள்ளது. மேற்கூறிய தினங்களில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் ஆய்வு செய்து குறிக்கப்பட்ட மின்னழுத்த அளவீடுகள் பின்வருவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| Sl.no. | Date of measurement | Voltage measured |
|---|---|---|
| 1. | 02.02.2024<br>06.00 PM | RN-246V |
| | | YN-239V |
| | | BN-240V |
| 2. | 22.02.2024<br>06.00 PM | RN-228V |
| | | YN-232V |
| | | BN-230V |

இதன்மூலம் மேற்கண்ட மின்னிணைப்பில் மின்னழுத்த அளவீடு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 14–இல் கூறப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் இருப்பது தெரியவருகிறது.

7.12 மேலும், மின்னழுத்த குறைபாட்டை சரிசெய்ய குறைதீர்மன்றம் அளித்த வழிகாட்டுதலின்படி 02.04.2024 அன்று 63 KVA மின்மாற்றியை 100 KVA மின்மாற்றியாக அமைத்து கூடுதலாக மின்னழுத்தம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது தெரியவருகிறது. மேற்கண்ட தரவுகளிலிருந்து உரிமதாரரின் கட்டமைப்பில் குறைந்த மின்னழுத்த குறைபாடு எதுவும் இல்லை என்றும் மின்னழுத்தம் சரியாக இருப்பதும் தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு தவிர அந்த மின்மாற்றியில் பயனடைந்து வரும் வேறு எந்த நுகர்வோரிடமிருந்து குறைந்த மின்னழுத்தம் தொடர்பாக எந்தவொரு புகாரும் பெறப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

7.13 மேலும், மேல்முறையீட்டாளர் மின்னழுத்த குறைபாடு தொடர்பாக தன்னுடைய பெட்ரோல் பங்கில் உள்ள CNG கேஸ் பம்பை இயக்க முடியவில்லை என புகார் அளித்த நிலையில் CNG கேஸ் பம்பை இயக்கும்போது மட்டுமே குறைவழுத்த மின்சாரம் பெறப்படுவதாக ஒப்புக் கொண்டுள்ளார். இந்நிலையில் குறைந்த மின்னழுத்தத்திற்கு உபகரணங்களோ அல்லது அதனை இணைக்கும் அமைப்புகளில் மின் தடையம் (resistance) அதிகமாக இருந்தாலும் மின்னழுத்தம் குறைய வாய்ப்புள்ளது.

7.14 எனவே, மேல்முறையீட்டாளருக்கு மின்சாரம் வழங்கப்படும் மின்மாற்றியில் இணைக்கப்பட்டுள்ள மற்ற மின் நுகர்வோரிடமிருந்து வேறு எந்த புகாரும் பெறப்பட்டாத நிலையில் மேல்முறையீட்டாளரின் CNG கேஸ் பம்பை இயக்கும் போது மட்டும் குறைந்த மின்னழுத்தம் ஏற்படுவதால் மேல்முறையீட்டாளர் உரிய தொழில்நுட்ப வல்லுநரை கொண்டு இணைக்கப்பட்ட உபகரணங்களை சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய CNG கேஸ் பம்பை இயக்கும்போது மின்னழுத்த குறைபாடு வருவதாக தெரிவிப்பதால் மின்னழுத்த குறைபாடு ஓர் இடத்தில் ஏற்பட்டால் அதில் பயன்பாட்டில் உள்ள கருவிகளின் மின் தடையம் (resistance)–ஐ

கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது என்பதும் ஆய்வு செய்ய வேண்டி இருப்பதும் புதிவு செய்யப்படுகிறது. அதாவது மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின்னழுத்த குறைபாடு ஏற்பட்டால் அதில் பயன்பாட்டில் உள்ள கருவிகளின் நிலையும் ஒரு காரணமாகும்.

7.15 மேலும், மின் இணைப்பு எண் 481– 004–415–இன் உரிமையாளரான மேனேஜர், இந்தியன் ஆயில் கார்பரேசன் அவர்கள் 16.07.2024 அன்று அளித்த மின்னஞ்சல் வாயிலாக அவருடைய மின் இணைப்பில் இருந்து வந்த மின்னழுத்த குறைபாடு சரிசெய்யப்பட்டுவிட்டதாகவும் தற்சமயம் எந்தவொரு மின்னழுத்த குறைபாடும் இல்லை என தெரிவித்துள்ளார். அந்த ஆவணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

Search

Contacts Calendar Briefcase Preferences RE: CGRF petiti

Reply | Reply to All | Forward | Delete | Spam | Actions

**RE: CGRF petition- Low voltage complaint rectified- confirmation report**

From: "Suman, Saurav(सौरव सुमन)" <sumans1@indianoil.in>

To: "AEE/VEMBADITHALAM" <ers4244aee3@tnebnet.org>

Cc: "seslm" <seslm@tnebnet.org> "EE" <ers4244ee@tnebnet.org>

Dear Sir,

This is in reference to the low voltage issue at our Indian Oil retail outlet M/s Aarthi Agencies situated at Periya Seeragapadi, Salem.

We would hereby like to confirm that the complaint was attended immediately and issue has been rectified. Till now, we have not faced the issue aga

Submitted for your kind information.

*With Regards,*

*aurav Suman*
*Manager(Retail Sales)*
*ankari Retail Sales Area*
*ndian Oil Corporation Limited*
*Mob – 7978040388*

ndianOil 2024 ACTION FOR GREEN TRANSITION

om: AEE/VEMBADITHALAM <ers4244aee3@tnebnet.org>
nt: Tuesday, July 16, 2024 11:53 AM
: Suman, Saurav(सौरव सुमन) <sumans1@indianoil.in>

7.16 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் மின்னழுத்த குறைபாடு இருப்பதாக புகார் எழுப்பிய காலகட்டத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிப்படி மின்னழுத்தம் இருப்பதால் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு தொடர்பான கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் வழங்கப்பட்ட மின்சாரத்தின் மின்னழுத்தம் அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் இருப்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 46/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி M.மாதவி, – <u>BY RPAD</u>
M/s. ஆர்த்தி ஏஜென்சீஸ்,
கடத்தூர் அக்ரஹாரம், பெரிய சீரகபாடி, சேலம் – 636 308.

2. மேற்பார்வை பொறியாளர், **சேலம்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி அஞ்சல், சேலம்– **636 014.**

3. செயற்பொறியாளர்/ இ&ப/தெற்கு–சேலம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வள்ளுவர் நகர், அன்னதானப்பட்டி, சேலம் – 636 002.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.